...ථන/தொலைபேசி இல./Telephone Nos
...අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. }

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல / My No. } ED/01/12/06/15/01

දිනය / திகதி / Date } 2008.04.21

சுற்றுநிருபம் **- 2008/12**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல பிரிவெனாதிபதி

சகல அரச, அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

## இடைநிலை **(6-11)** வகுப்புக்களில் புதிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

இடைநிலை தரம் (6-11) வகுப்புக்களில் புதிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக இதற்கு முன் விநியோகிக்கப்பட்ட 2006.03.07 திகதியும் 2006/09 இலக்கமும், 2007.03.07 திகதியும் 2007/06 இலக்கமும் கொண்ட சுற்றுநிருபங்களுக்கு மேலதிகமாக இச்சுற்றுநிருப விதிமுறைகளும் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும்.

1. அழகியல் பாடத்துறையின் கீழ் 6-9 தரங்களுக்கான இலக்கிய நயம் பாடம் நீக்கப்பட்டுள்ளதுடன் அப்பாடம் 10-11 தரங்களில் முன்னர் போன்றே மாணவர்கள் கற்க முடியும்.
2. 10—11 தரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கப்படாத பாடவேளைகளுள் ஒரு பாடவேளை உடல்நல கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு பாடவேளை தேசிய தேவையெனக்கருதி விவசாய நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட வேண்டும். இம் மேலதிக பாடவேளையின்போது குறிப்பிட்ட வகுப்பு / வகுப்புக்களில் எல்லா மாணவர்களும் பங்குபற்றச் செய்வதற்கு வகை செய்தல் வேண்டும். மிகுதி பாடவேளையை பாடசாலை நிருவாகக் குழுவினரினால் தீர்மானிக்கப்படுகின்ற பாடங்கள், கற்றச் செயற்பாடுகளுக்கு விளையாட்டு, இலக்கியமன்றம் போன்றே இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக பயன்படுத்த வேண்டும்.
3. நூலக பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளை முறைமையாக பயன்படுத்துவது தொடர்பாக பாடசாலை கொள்கையொன்றினை வகுத்துக்கொண்டு அதன்படி கருமமாற்ற வேண்டியுள்ளது.
4. இருமொழி மூல வகுப்புக்கள் நடாத்துதல்.
   - 4.1. 6-11 தரங்களுக்கு சில பாடங்களை சிங்களம் / தமிழ் மொழியூடாகவும் தெரிவுசெய்யப்பட்ட சில பாடங்கள் ஆங்கில மொழி மூலமாகவும் ஒரே வகுப்பில் (இரு பிரதான மொழிகள் / இருமொழி மூலம்) கற்பித்தல் இருமொழிமூல வகுப்புக்கள் என குறிப்பிடப்படும்.
   - 4.2. ஆங்கில மொழியின் தேவையும் முக்கியத்துவமும் கவனத்திற்கொண்டு 2002 ஆம் ஆண்டு முதல் 6-11 தரங்களில் சில பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தலுக்கு அது தொடர்பான வசதிகள் கொண்ட பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 2007 தொடக்கம் இடைநிலை (6-11) வகுப்புக்களில் நடைமுறைப்படுத்தப்படும் புதிய

கட்டாயப் பாடங்களில் இரண்டுடன் தொகுதிப் பாடங்களில் குறிப்பிட்டுள்ள பாடங்களுள் ஏதாவது மூன்று பாடங்களையும் சேர்த்து மொத்தம் ஐந்து பாடங்கள் ஆங்கில மொழிமூலம் கற்பதற்கு தெரிவு செய்து கொள்ளலாம்.

4.6. இலக்கம் 4.4, 4.5 என்பவற்றில் குறிப்பிட்டுள்ள எல்லைகள் (சாதாரணதர) பரீட்சைக்கு தோற்றும் பிரத்தியேக விண்ணப்பதாரிகளுக்கு பொருத்தமுடையதல்ல.

4.7. 6-11 வரையான வகுப்புக்களில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்க வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை பாடசாலையின் மனித, பௌதீக வளங்களுக்கேற்ப அப் பாடசாலையே தீர்மானிக்க வேண்டும். இது ஆங்கில பாடம் தவிர்ந்த குறைந்தது ஒன்று / ஆகக்கூடியது ஐந்து பாடங்களாக இருக்கலாம். ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கக்கூடிய மேலே குறிப்பிட்டுள்ள பாடங்களுள் கற்பிக்கத் தீர்மானிக்கும் பாடம் / பாடங்கள் பற்றி அதிபர் கல்வி அமைச்சின் இருமொழிமூல கல்விப் பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும்.

4.8. மாணவர் ஆங்கில மொழிமூல பாடங்கள் சிலவற்றைக் கற்றாலும் பாடசாலை விண்ணப்பதாரிகள் க.பொ.த (சாதாரணதர) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது மாணவரின் விருபத்திற்கேற்ப ஒன்று / பல பாடங்களை ஆங்கிலமொழிமூலம் விண்ணப்பிக்க முடியும். எனினும், அதன்பிறகு ஏதேனும் காரணத்தை முன்வைத்து விண்ணப்பித்த மொழிமூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.9. 2009 ஆம் ஆண்டு 6ஆம் தரத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற வரலாறு பாடம் ஆங்கில மொழிமூலம் கற்பிக்க முடியாது எனினும் ஏற்கனவே வரலாறு பாடம் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும் மாணவர்களுக்கு தரம் 11 வரை இப்பாடத்தை ஆங்கிலமொழி மூலமே தொடர்ந்து கற்க முடியும்.

இச்சுற்றுநிருபத்திற்கமைய மாற்றமுறும் விடயங்கள் தவிர ஏனைய அனைத்து அறிறுத்தல்களும் 2006/09, 2007/06 சுற்றுநிருபங்களுக்கேற்ப இடம்பெற வேண்டும்.

எம்.எம்.என்.டீ. பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - தகவலுக்காக
2. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு - தகவலுக்காக
3. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - எடுக்க வேண்டிய நவடிக்கைக்காக
4. பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் - எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக